an International CBSE Finger Print School
Coimbatore

# இயல் 3.3 - தப்பிப் பிழைத்த மான்

GRADE- V

QUESTION BANK

## அ) வினாக்களுக்கு விடையளி.

### 1. தப்பிப் பிழைத்த மான் என்ற கதையைச் சுருக்கி எழுதுக.

காகமும் மானும் இணைபிரியா நண்பர்கள். அவர்களைப் பிரித்து மானை எப்படியாவது கொன்று தின்றுவிட வேண்டும் என எண்ணி நரி, காகத்திடமிருந்து மானைப் பிரிக்க எண்ணியது.

நரியை நண்பனாக ஏற்றுக்கொண்ட மானிடம் “நண்பா, யாரையும் நம்பி விடாதே! அது நமக்கு ஆபத்து.” என்று காகம் கூறியது. மேலும் “கண்ணால் காண்பதும், காதால் கேட்பதும் பொய், தீர விசாரிப்பதே மெய் என்றது. ஆனால் மான் காகத்தின் அறிவுரையைக் கேட்கவில்லை. நரியை நம்பியது.

தந்திர நரி, மானை விவசாயி ஒருவரின் விளைச்சல் நிலத்திற்கு அழைத்துச் சென்றது. மான் அங்கு மேய்ந்துக் கொண்டிருக்கும் போது விவசாயி பார்த்து விட்டார். விவசாயி மானைத் துரத்தும் போது மான் கம்பிவேலியில் மாட்டிக்கொண்டது.

அதைக் கண்ட காகம் விவசாயி அருகில் வரும் வரை நீ இறந்ததுபோல் அசையாமல் இரு விவசாயி உன்னை வேலியிலிருந்து விடுவித்தவுடன், நான் மரத்திலிருந்து கா கா கா என்று குரல் கொடுக்கிறேன், உடனே தப்பித்து விடு என்றது காகம். அதன் படி மான் நடித்தது. வேடன் விடுவித்தவுடன் காகம் கரைய மான் தப்பி ஓடியது.

இக்கதையின் மூலம் "ஆபத்தில் உதவுபவனே உண்மையான நண்பன்" என்ற நீதியை அறியலாம்.